செ.வெ.எண்: 33/அக்டோபர் நாள் : 28.10.2020

# இராமநாதபுரம் மாவட்டம்

## "முன்னேற விழையும் மாவட்டங்கள்" (Aspirational Districts) திட்ட செயல்பாடு குறித்து காணொளி காட்சி மூலம் ஆய்வு

## மாண்புமிகு மாநில வளர்ச்சி கொள்கை குழு துணைத்தலைவர் திரு.சி.பொன்னையன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தமிழகத்தில், "முன்னேற விழையும் மாவட்டங்கள்" (Aspirational Districts) என்ற திட்டம் செயல்படுத்தப்படும் இரு மாவட்டங்களான விருதுநகர், இராமநாதபுரம் ஆகியவற்றின் திட்ட செயல்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு மாநில வளர்ச்சி கொள்கை குழு துணைத்தலைவர் திரு.சி.பொன்னையன் அவர்கள் தலைமையில் 27.10.2020 அன்று நடைபெற்றது.

காணொளி வாயிலாக நடைபெற்ற இக்கூட்டத்தில், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் மற்றும் விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.இரா.கண்ணன்,இ.ஆ.ப., அவர்கள் மற்றும் பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு மாநில வளர்ச்சி கொள்கை குழு துணைத்தலைவர் திரு.சி.பொன்னையன் அவர்கள், இராமநாதபுரம், விருதுநகர் மாவட்டங்கள் முறையே வேளாண்மை மற்றும் நீர்வள மேம்பாடு, அடிப்படை உட்கட்டமைப்பு துறைகளில் முதற்பரிசாக ரூ.3 கோடி வென்றதற்கும், தற்போது சூலை 2020 மாதத்தில் விருதுநகர் மாவட்டம் நலவாழ்வு ஊட்டச்சத்து பிரிவில் அடைந்த முன்னேற்றத்திற்காக ரூ.3 கோடி வென்றதற்கும் மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் துறை அலுவலர்களை பாராட்டினார். இவ்விரு மாவட்டங்களும் பல்வேறு காரணிகளில் 100 விழுக்காடு முன்னேற்றம் அடைந்திருந்தாலும் மேலும் பல காரணிகளின்பால் சிறப்பு கவனம் செலுத்திட அறிவுறுத்தினார். குறிப்பாக, கோவிட் 19 பெருந்தொற்று ஏற்படுத்தியுள்ள இச்சவாலான சூழ்நிலையை முன்னேற்ற நடவடிக்கைக்கான நல்வாய்ப்பாக மாற்றிடும் வகையில் மாவட்ட பொருளாதாரத்தை சீராக்கத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வலியுறுத்தினார்.

மேலும் முத்ரா கடன் திட்டம், இ-நாம் எனப்படும் இணையவழி வேளாண் சந்தை, நுண்ணீர் பாசனம், சான்று பெற்ற விதைப்பயன்பாடு, முன்திறனுடையோரை கண்டறிந்து திறன் சான்று வழங்கல் ஆகியவற்றில் சீரிய முயற்சியுடன் கூடிய தனிகவனம் மேற்கொள்வதன் வாயிலாக மாவட்டங்கள் பெற்ற முன்னிலையை தக்க வைத்துக் கொள்ளுமாறு தெரிவித்தார். மேலும், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சரின் முதன்மை திட்டமான குடிமராமத்து திட்டத்தையும் மற்றும் கிராம மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு தமிழக அரசின் சிறப்பு திட்டங்களையும் சீரிய முறையில் செயல்படுத்தி ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திட அறிவுரை வழங்கினார்.

மாநில வளர்ச்சி கொள்கை குழுவின் உறுப்பினர் செயலர் (முழு கூடுதல் பொறுப்பு) முனைவர் அதுல் ஆனந்த்,இ.ஆ.ப., அவர்கள் இவ்வாய்வுக் கூட்டத்தினை ஒருங்கிணைத்து நடத்தினார். இத்திட்டத்தின் கீழ் மாவட்டங்களின் முன்னேற்றம், சிறப்பு கவனம் தேவைப்படும் துறைகளை சுட்டிக்காட்டி மாவட்ட செயற்திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட செயலுத்திகளை கவனமுடன் பரிசீலித்து நடைமுறைப்படுத்துமாறு தெரிவித்தார். இவ்வாய்வுக் கூட்டத்தில் மாநில வளர்ச்சி கொள்கை குழு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**